செய்தி வெளியீட்டு எண்:687 நாள் – 07.10.2009

**செய்தி வெளியீடு–7.10.2009**

**2001இல் முந்தைய ஆட்சி காலத்தில் நடந்த விபத்தில் உயிரிழந்த மூன்று குழந்தைகளின் பெற்றோர்க்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி ! முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

**காஞ்சிபுரம் புண்ணிய கோட்டீஸ்வரர் கோயில் தெருவில் வசிக்கும் திரு. தவமணி புகழேந்தி அவர்களின் மகன்கள் விஜயசங்கர் (வயது 11), பரசுராமன் (வயது 9), இளைய சூரியன் (வயது 4) ஆகிய மூவரும் 25.10.2001 அன்று வீட்டின் அருகில் இருந்த குட்டையில் சைக்கிளை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது தண்ணீரில் தவறி விழுந்த சைக்கிளை எடுப்பதற்காக முயன்று, அக்குட்டையில் மூழ்கி உயிரிழந்தனர். இம்மூவரும் அறிஞர் அண்ணா அவர்களின் நண்பரும், காஞ்சிபுரம் மொழிப்போர் தியாகியுமான திரு.பரசுராமன் அவர்களின் பேரன்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்து குறித்து, முந்தைய ஆட்சி காலத்தில் கோரிக்கைகள் வைத்தும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எந்தவொரு நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை.**

**இந்நிலையில், மூன்று குழந்தைகளையும் ஒரே நேரத்தில் பறிகொடுத்த பெற்றோர் இத்துயர சம்பவம் தொடர்பாக மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, விபத்து பற்றி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினைப் பெற்று அதன் அடிப்படையில், திரு. தவமணி புகழேந்தி அவர்கள் குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு உயிரிழந்த குழந்தைகள் ஒவ்வொருவருக்காகவும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (7.10.2009) ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9